# புகையிலை இல்லாத தலைமுறை (Tobacco Free Generation)

2010 ஆம் ஆண்டிற்குப் பிறகு பிறந்த ஒவ்வொரு நபரும் புகையிலைப் பொருட்களை சட்டபூர்வமாக கொள்வனவு செய்வதிலிருந்து பாதுகாக்கும் வகையில், இளைய தலைமுறைகளுக்காக புகையிலை விற்பனையை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட ஒரு கொள்கை

## புகையிலை இல்லாத தலைமுறை என்றால் என்ன?

புகையிலை இல்லாத தலைமுறை (TFG) என்பது. ஜனவரி, 01ம் திகதி 2010ஆம் ஆண்டிற்கு பின்னர் பிறந்தவர்களுக்குப் புகையிலை விற்பனையைப் படிப்படியாக நிறுத்தி, இளைய தலைமுறையினரை அவர்களின் வாழ்நாள் முழுவதும் புகையிலையிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமாகும்.

இதன் மூலம் சாதாரண வயது வரம்பு விதிப்பைத் தாண்டி, சட்டபூர்வமாக புகைபிடிக்க அனுமதிக்கப்படும் வயது ஒவ்வொரு ஆண்டும் ஒரு வருடம் உயர்த்தப்படும். அதன்படி, குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்னர் பிறக்கும் எந்த நபருக்கும் அவர்களின் வாழ்நாள் முழுவதும் சட்டரீதியாக புகையிலைப் பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்பு கிடைக்காது. இது ஒரு சாதாரண வயது வரம்பு விதிப்பாக மட்டும் இல்லாமல், மக்கள்தொகை வளர்ச்சியுடன் இணைந்து முன்னேறும் ஒரு கொள்கையாகும். அதன் அடிப்படையில், பாதுகாக்கப்படும் மக்களின் தொகை ஆண்டுதோறும் விரிவடைந்து, சில தசாப்தங்களுக்குப் பின்னர் முழு சமூகத்தையும் உள்ளடக்கும் நிலையை அடையும்.

## இலங்கையின் முன்மொழிவு

2025 ஆம் ஆண்டில், இலங்கை மருத்துவ சங்கம் இந்தக் கொள்கையை இலங்கையில் அறிமுகப்படுத்துமாறு கௌரவ சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தது. இந்த முன்மொழிவின்படி, 2010 ஆம் ஆண்டு அல்லது அதற்கு பின்னர் பிறந்த எவருக்கும் புகையிலைப் பொருட்களை விற்பனை செய்வது முழுமையாகத் தடை செய்யப்படும். அதாவது, 2031 ஆம் ஆண்டில் 21 வயதை அடையும் அல்லது அதற்கு குறைவான இளைஞர்கள் எவரும் சட்டரீதியாக புகையிலைப் பொருட்களை கொள்வனவு முடியாத நிலை உருவாகும்.

மேலும், 2006 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க மதுசாரம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகார சபை சட்டத்தின் நோக்கங்களும் இந்தக் கொள்கையை வலுப்படுத்துகின்றன. மனிதர்களின் சுகாதாரமும் வாழ்வுரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் ‘மனித உரிமைகள் குறித்த உலகப் பிரகடனம்’ போன்ற சர்வதேச மனித உரிமை ஆவணங்களுடனும் இந்தக் கொள்கை நன்கு பொருந்துகின்றது.

## இதன் அவசியம் என்ன?

| 15,000+ | Rs. 560M | 40–50 |
|---|---|---|
| இலங்கையர்கள் ஒவ்வொரு ஆண்டும் புகையிலையால் இறக்கின்றனர். | இலங்கையில் சிகரட்டுகளுக்காக தினசரி செலவிடப்படும் தொகை | புகையிலை பாவனையால் ஏற்படும் நோய்களால் தினசரி ஏற்படும் இறப்புகள் |

- புகையிலை என்பது, பயன்படுத்துவோர் இருவரில் ஒருவரை உயிரிழக்கச் செய்யும் தயாரிப்பாகும். இவ்வாறு அகால மரணங்களை தழுவுவோர் நமது தந்தையர்கள், சகோதரர்கள் மற்றும் நாட்டின் தொழிலாளர் படையில் பங்களிக்கக்கூடிய மதிப்புமிக்க இளைஞர்களாகும்.
- புகையிலை காரணமாக ஏற்படும் நோய்களுக்கு அரசு வருடாந்தம் பில்லியன் கணக்கான ரூபாய்களை செலவழிக்கிறது. இளைஞர்கள் புகைத்தல் பாவனையை ஆரம்பிப்பதைத் தடுப்பதன் மூலம், காலப்போக்கில் இந்த மிகப்பெரிய பொருளாதாரச் சுமையை குறிப்பிடத்தக்க அளவில் குறைக்க முடியும்.
- புகையிலை நிறுவனங்கள் பல்வேறு சூழ்ச்சிகளை பயன்படுத்தி, குழந்தைகளை சிறு வயதிலிருந்தே தங்களின் நுகர்வோர்களாக மாற்ற முயற்சிக்கின்றன. ‘புகையிலை இல்லாத தலைமுறை’ கொள்கையை நடைமுறைப்படுத்துவது, இவ்வகையான சூழ்ச்சிகளுக்கு ஒரு தடையாக அமையும்.

- புகைத்தல் பாவனையாளர்கள் தங்களின் சுகாதார பிரச்சினைகளின் காரணமாக, அடிக்கடி விடுமுறை பெறுவது மாத்திரமின்றி, மேலும் புகைத்தல் பாவனையால் உற்பத்தி திறன் குறைவடைகின்றது. இந்த புதிய கொள்கையின் மூலம், ஆரோக்கியமும் உற்பத்தித்திறனும் கொண்ட தொழிலாளர் படை உருவாகும் இது குடும்ப பொருளாதாரம், தொழில் மற்றும் மொத்த தேசிய பொருளாதாரத்திற்கும் மிகப்பெரிய பலமாக அமையும்.
- புகையிலைக்கு வீணாக செலவிடப்படும் பணத்தை, ஏனைய அத்தியாவசிய பொருட்கள் அல்லது சேவைகளுக்காக பயன்படுத்தினால், அது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் ஊக்குவிக்கும் என்பதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறு பணச் சுழற்சி அதிகரிப்பதன் மூலம் பல்வேறு துறைகளில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். எனவே, புகையிலைத் தொழில் குறைவதால் இழக்கப்படும் வேலைவாய்ப்புகளுக்குப் பதிலாக இன்னும் சிறந்த மாற்று வாய்ப்புகள் உருவாகும்.
- சிகரட் உள்ளிட்ட புகையிலை சார்ந்த பொருட்கள், மனிதர்களின் மகிழ்ச்சியையும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்துகின்றன. இந்த முன்மொழிவு, மனிதர்கள் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கு வாய்ப்பை உருவாக்குகிறது.

## உலகளாவிய எடுத்துக்காட்டுகள்

**மாலைத்தீவு**

Tobacco-Free Generation (TFG) கொள்கையை நடைமுறைப்படுத்திய உலகின் முதல் நாடாக மாலைத்தீவு அமைந்துள்ளது. ஜனவரி 1, 2007 அன்று அல்லது அதற்குப் பின்னர் பிறந்தவர்கள் புகையிலை பொருட்களை கொள்வனவு செய்யவோ, பயன்படுத்தவோ அல்லது விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளனர்.

**இங்கிலாந்து**

2008 இற்கு பிறகு பிறந்த எவருக்கும் புகையிலை - சிகரட், சுருட்டு, தளர்வான புகையிலை, மெல்லுதல் மற்றும் சூடுபடுத்தப்பட்ட புகையிலை ஆகியவற்றின் விற்பனையை முடிவுக்குக் கொண்டு வரும் புகையிலை இல்லாத தலைமுறை கொள்கையான ‘புகையிலை மற்றும் வேப்ஸ் மசோதா’ சமீபத்தில் கையெழுத்திட்டது.

## காலப்போக்கில் இக்கொள்கை செயற்படுத்தப்படும் முறை

| | |
|---|---|
| **தற்காலம்** | அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகள் TFG கொள்கையை அரசாங்கத்திற்கு அதிகாரப்பூர்வமாக முன்மொழிகின்றன. |
| **கொள்கை அமுலாக்கம்** | 2010 ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பிறகு பிறந்த அனைவருக்கும் புகையிலை விற்பனை நிரந்தரமாகத் தடை செய்யப்படும். |
| **2031 முதல்** | அந்த ஆண்டில் 21 வயதை அடையும் இளைஞர்கள் மற்றும் அதற்கு பிறகு வரும் தலைமுறைகள் சட்டபூர்வமாக ஒருபோதும் புகையிலை கொள்வனவு முடியாது. பாதுகாக்கப்படும் தலைமுறை ஆண்டுதோறும் விரிவடையும். |
| **பல தசாப்தங்களுக்கு பிறகு** | இந்தக் கொள்கை முழு மக்கள்தொகையையும் உள்ளடக்கும். இலங்கை புகையிலை இல்லாத இலக்கை அடையும்! |

## நீங்கள் எவ்வாறு பங்களிக்கலாம்

**கொள்கையின் நன்மைகள் குறித்து பிறருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துங்கள், இந்தக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்காக செயற்பாட்டுடன் ஆதரவு வழங்குங்கள், புகையிலை நிறுவனங்களின் சூழ்ச்சிமிக்க நடவடிக்கைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வாருங்கள்.**

ADIC
Alcohol and Drug Information Centre
Alcohol and Drug Information Centre
www.adicsrilanka.org
40/18, Park Road, Colombo 5.
+94 112 584416, +94 112 592515